. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 16.05.2026 • மலர் 04 • இதழ்: 136 • Edition : Nagercoil • 16.05.2026 • Vol : 04 • Issue : 136 • Page : 4 • Rs. 5/-

உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

### எல்.பி.ஜி. விநியோகம்:

# ஐக்கிய அரபு அமீரகத்துடன் இந்தியா ஒப்பந்தம்



அபுதாபி, மே. 16

பிரதமர் மோடி டெல்லியில் இருந்து விமானம்மூலம்ஐக்கியஅரபு அமீரகத்திற்கு புறப்பட்டார். அவர் 6 நாட்கள் பயணமாக 5 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். ஐக்கிய அரபு அமீரகம், நார்வே, சுவீடன், நெதர்லாந்து, இத்தாலி உள்ளிட்ட நாடுகளுக்கு அவர் அரசு முறை பயணம் மேற்கொள்கிறார். இந்தநிலையில், தனது பயணத்தின் முதற்கட்டமாக ஐக்கிய அரபு அமீரகம் சென்ற பிரதமர் மோடிக்கு அந்நாட்டு சார்பில் உற்சாக ராணுவ வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பிரதமர் மோடி ஐக்கிய அரபு அமீரகத்தின் அதிபர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானை சந்தித்து ஆலோசனை நடத்தினார். அதில் பல முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுதாகி உள்ளன. எல்.பி.ஜி விநியோகம் தொடர்பாக ஐக்கிய அரபு அமீரகத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய உள்கட்டமைப்புகளுக்கு 5 பில்லியன் அமெரிக்க டாலர் முதலீடு செய்யவும், இந்தியாவில் பெட்ரோலிய மூலங்களை கண்டுபிடிப்பது தொடர்பாகவும் இந்தியாவில் கச்சா பெட்ரோலியத்தை இருப்புவைப்பதுகுறித்தும், இந்தியாவில் கப்பல் பழுதுபார்க்கும் மையங்களை அமைத்தல் உள்ளிட்டவை தொடர்பாகவும் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## முதல் அமைச்சர் விஜய் மீது சிபிஐ வழக்குப்பதிய வாய்ப்பு: அதிமுக எம்.பி இன்பதுரை பேட்டி



சென்னை, மே. 16

தமிழ்நாட்டில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் தவெக 108 இடங்களில் வெற்றி பெற்று தனி பெரும் கட்சியாக உருவெடுத்தது. ஆனால் பெரும்பான்மைக்கு தேவையான 118 இடங்களை பெற காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விசிக உள்ளிட்ட கட்சிகள் உடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களது ஆதரவை பெற்றது. அதிமுகவில் சிவி சண்முகம் எஸ்பி வேலுமணி தலைமையில் 25 எம்.எல்.ஏக்கள் தவெக அரசுக்கு ஆதரவு அளித்துள்ளனர். தவெகவுக்கு ஆதரவு அளித்து இருப்பதில் குதிரை பேரம்நடைபெற்றுஇருக்கலாம் என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன. இந்நிலையில் முதலமைச்சர் விஜய் மீது சிபிஐ வழக்குப்பதிவு செய்ய வாய்ப்புள்ளது என அதிமுக எம்.பி இன்பதுரை எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது: நாடாளுமன்றத்தில் 1993ல் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற குதிரை பேரம் மூலம் ஜேஎம்.எம் எம்பிக்கள் ஆதரவை குறுக்கு வழியில் பெற்ற அன்றைய பிரதமர் நரசிம்மராவ், பூட்டாசிங் ஆகியோர் மீது சிபிஐ வழக்கு பதிவு செய்தது போன்று, தற்போதும் முதல்வர் விஜய் மீது வழக்கு வர வாய்ப்பு உள்ளது " என்று பதிவிட்டுள்ளார்.

## பெட்ரோல், டீசல் விலை உயர்வை உடனே திரும்ப பெற வேண்டும்: திருமாவளவன் வலியுறுத்தல்



சென்னை, மே. 16

பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு விசிக தலைவர் தொல். திருமாவளவன் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக திருமாவளவன் கூறியிருப்பதாவது; தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மே.வங்கம் மற்றும் அசாம் ஆகிய ஐந்து மாநிலங்களில் தேர்தல் முடியும் வரை பொறுத்திருந்த பாஜக ஒன்றிய அரசு தற்போது பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் விலையைத் திடுமென உயர்த்தியுள்ளது. இந்திய அரசின் இந்த மக்கள்விரோத போக்கை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கண்டிக்கிறது.

பெட்ரோல்டீசல் ஆகியவற்றின் விலையை லிட்டருக்கு 3.00ருபாய் என உயர்த்தியிருப்பதன் மூலம் பாஜக அரசு எளிய மக்களின் அடிவயிற்றில் கை வைத்துள்ளது. இந்த விலை உயர்வின் மூலம் பக்க விளைவுகளாக அனைத்து இன்றியமையாத அன்றாட பயன்பாட்டுப் பொருள்களின் விலைவாசியும் வெகுவாக உயரும். இதனல் மிகவும் பாதிக்கப்பட போவது விளிம்புநிலையைச் சார்ந்த ஏழைஎளிய உழைக்கும் மக்களே ஆவர். எனவே, பெட்ரோல்மற்றும்டீசலுக்கான இந்த விலை உயர்வை உடனே திரும்ப பெற வேண்டுமென இந்திய ஒன்றிய அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்" என்று கூறியுள்ளார்.

### பெட்ரோல், டீசல் விலை உயர்வு:

## மோடி அரசின் தவறுக்கு பொதுமக்கள் விலை கொடுக்கின்றனர்: ராகுல் காந்தி



டெல்லி, மே. 16

கச்சா எண்ணெய் விலை , டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு போன்ற பல்வேறு காரணிகள் அடிப்படையில் பெட்ரோல், டீசல் விலையை எண்ணெய்நிறுவனங்கள்நிர்ணயம்செய்துவருகின்றன.

இதனிடையே, மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் காரணமாக கடந்த சில மாதங்களாக கச்சா எண்ணெய் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. கச்சா எண்ணெய் விலை உயர்வு காரணமாக பெட்ரோல், டீசல் விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அதேவேளை, 5 மாநில தேர்தல் நடைபெற்று வந்த நிலையில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படாமல் இருந்தது. தற்போதுதேர்தல்நிறைவடைந்தநிலையில்பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

அதன்படி, நாடு முழுவதும் பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு இன்று அதிரடியாக உயர்த்தியுள்ளது. பெட்ரோல், டீசல் லிட்டருக்கு தலா ரூ. 3 உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ. 103.98க்கு, டீசல் ஒரு லிட்டர் ரூ. 95.50க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பெட்ரோல், டீசல் விலை உயர்வால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். இந்த விலை உயர்வால் அத்தியாவசிய பொருட்களின் விலை உயரும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பெட்ரோல், டீசல் விலையை உயர்த்திய மத்திய அரசின் நடவடிக்கைக்கு காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், மத்திய அரசின் தவறுக்கு பொதுமக்கள் விலைகொடுக்கின்றனர்.பெட்ரோல்,டீசல்லிட்டருக்கு தலா ரூ. 3 விலை உயர்வு என்ற அதிர்ச்சி ஏற்கனவே வந்துவிட்டது. பாக்கி தொகையை தவணை முறையில் எடுத்துக்கொள்வார்கள்

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிவகாசியில்

## எம்.எல்.ஏ. அலுவலகத்தின் இருப்பிடமே தெரியாமல் இருந்தது; இனி 24 மணி நேரமும் திறந்திருக்கும் : அமைச்சர் கீர்த்தனா




மதுரை, மே. 16

தமிழக சட்டமன்ற தேர்தலில் சிவகாசி தொகுதியில் போட்டியிட்ட த.வெ.க. வேட்பாளர் கீர்த்தனா, 68,709 வாக்குகளைப் பெற்று, 11,670 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். தொடர்ந்து, கடந்த 10ந்தேதி தமிழக முதல்அமைச்சராக விஜய் பதவியேற்றார். அன்றைய தினமே, கீர்த்தனா உள்பட 9 த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

இந்நிலையில், சிவகாசி எம்.எல்.ஏ.வும், அமைச்சருமான கீர்த்தனா, மதுரையில் இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"நான்தான்சிவகாசியின் முதல் பெண் எம்.எல்.ஏ. என்று சொல்கிறார்கள். ஆனால், அதைவிட சிவகாசியின் சிறந்த எம்.எல்.ஏ. என்ற பட்டத்தை வாங்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை. இதுவரை சிவகாசியில் எம்.எல்.ஏ. அலுவலகத்தின் இருப்பிடமே தெரியாமல் இருந்தது. தெரியாதவர்களுக்காக சொல்கிறேன், கோர்ட்டு பக்கத்தில்தான் எம்.எல்.ஏ. அலுவலகம் இருக்கிறது. கடைசி 5 வருடங்களாக அலுவலகத்தை திறக்கவே இல்லை. நாங்கள்தான் அதை திறந்து, சுத்தம் செய்து தயார்படுத்தியுள்ளோம். இனி, 24 மணி நேரமும் மக்கள் பணிக்காக எம்.எல்.ஏ. அலுவலகம் திறந்திருக்கும்.

சட்டசபையில் எம்.எல்.ஏ.வாக பதவியேற்கும்போது சான்றிதழை கொண்டு செல்ல மறந்துவிட்டேன் என்று சொல்கிறார்கள். ஆனால் சான்றிதழ் எல்லாம் என்னிடம்தான் இருந்தது. மறதி என்றெல்லாம் தவறாக எழுதுகிறார்கள், அதைதவிர்த்திருக்கலாம்.

சிவகாசியில் வெடி விபத்துகளை தடுப்பது குறித்து ஆய்வு செய்ய கமிட்டி அமைக்கப்படும் என எனது தேர்தல் வாக்குறுதியிலேயே நான் சொல்லியிருந்தேன். அதற்கான பணிகளை செய்து வருகிறோம். இதுவரை யாரும் இதுபோல் கமிட்டி அமைக்கவே இல்லை. இந்த கமிட்டியில் நிபுணர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள், அதுமட்டுமின்றிதொழிலாளர்களும் இடம்பெறப் போகிறார்கள். அனைவரும் சேர்ந்து கலந்தாய்வு செய்து முடிவு எடுக்கப்போகிறார்கள்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தவெக அரசில் காங்கிரசுக்கு 2 அமைச்சர்கள்; மாணிக்கம் தாகூர் தகவல்



சென்னை, மே. 16

தமிழக சட்டசபை தேர்தலில் வெற்றிபெற்ற விஜய் தலைமையிலான தவெக அரசு ஆட்சி அமைத்துள்ளது. தவெக அரசுக்கு காங்கிரஸ் உள்பட பல்வேறு கட்சிகள் ஆதரவு அளித்துள்ளன. அதேவேளை, கூட்டணிக்கு வரும் கட்சிகளுக்கு அமைச்சரவையில் இடம் அளிக்கப்படும் என்று தேர்தலின்போது தவெக தலைவர் விஜய் வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால், தேர்தலின் போது தவெக கூட்டணிக்கு எந்த கட்சியும் வரவில்லை. தேர்தல் நிறைவடைந்த நிலையில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத சூழ்நிலையில் தவெகவுக்கு காங்கிரஸ் உள்பட சில கட்சிகள் ஆதரவு அளித்தன. இதன் மூலம் ஆட்சியை தவெக கைப்பற்றியது. முதல்அமைச்சராக விஜய் கடந்த 10ம் தேதி பொறுப்பேற்றுக்கொண்டார். அவருடன் 9 தவெக எம்.எல்.ஏ.க்கள் அமைச்சர்களாக பொறுப்பேற்றுக்கொண்டனர். அமைச்சர்களுக்கு இலாகா இதுவரை ஒதுக்கப்பட உள்ளது.

இந்நிலையில், தவெக அரசில் 2 காங்கிரஸ் அமைச்சர்கள் இடம்பெறுவார்கள் என்று காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

2026 தேர்தலுக்கு முன்பே திமுக "ஆட்சியில் பங்கு தமிழகம் ஏற்காது என்று வெளிப்படையாக அறிவித்தது.

அதற்கு மக்கள் தங்களின் தீர்ப்பை வழங்கி விட்டார்கள். தமிழக மக்கள் ஆட்சியில் பங்கு பெற வேண்டும் என்று கூறிவிட்டனர்.

ஒரு புதிய வரலாறு எழுதப்படுகிறது. கூட்டணி கட்சிகளுக்கு என்றும் அதிகாரத்தில் பங்கு வழங்கப்படும் என்று கூறிய தவெக தலைவர் விஜய் தனது வாக்குறுதியை காப்பாற்றியுள்ளார்.

தற்போது, 59 ஆண்டுகளுக்குப் பிறகு, கதர் அணிந்த இரு காங்கிரஸ் அமைச்சர்கள் அமைச்சரவையில் இடம்பிடிக்கிறார்கள். என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்களுக்கு இது உணர்ச்சி பூர்வமான, வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம்.

36% கமிஷன் அரசியலிலிருந்து, ஊழல் இல்லா ஆட்சிக்குத் தமிழகத்தை கொண்டு செல்ல வேண்டும்.

புதிய அரசு. புதிய நம்பிக்கை. #தவெக #காங்கிரஸ்

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### மதுரையில்

## கடந்த ஆட்சியில் ரூ.400 கோடிக்கு மேல் ஊழல் அமைச்சர் சிடிஆர் நிர்மல்குமார் பரபரப்பு குற்றச்சாட்டு



மதுரை, மே. 16

மதுரையில் அமைச்சர் சிடிஆர் நிர்மல்குமார் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

கடந்த ஆட்சியில் மதுரை மாநகராட்சியில் ரூ.400 கோடிக்கு மேல் ஊழல் நடந்துள்ளது. அது குறித்து விசாரிக்கப்படும். மதுக்கடைகளை படிப்படியாக மூட நடவடிக்கை எடுக்கப்படும். குட்கா, போதை பொருட்களை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும். நீட் தேர்வை கூட மத்திய அரசால் சரியாக நடத்த முடியவில்லை. நீட் தேர்வு தேவையற்ற ஒன்று.

திமுகவும் அதிமுகவும் இணைந்து ஆட்சியமைக்க 100 சதவீதம் முயற்சி நடந்தது. ஆனால் மக்கள் தீர்ப்புக்கு எதிராக முடிவெடுக்க வேண்டாம் என சில தலைவர்கள் சொன்னதால், அம்முயற்சி முறியடிக்கப்பட்டது.

அதேபோல அதிமுகவில் சிலர் விருப்பப்பட்டதால் எங்கள் தலைவர் விஜய் நேரில் சந்தித்தார்.

ஒருசில பேரை ஒருசில சூழ்நிலையில் சந்தித்தால் அது சரியாக இருக்காது. அது மக்களுக்கும் எதிராக இருக்கும். அதனால் சந்திப்பு ஏற்பாடு செய்யப்படவில்லை என்றார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701



### மீறுசமுத்திரம் கண்மாயில்

# பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய நவீனப்படுத்தும் பணிகள்: கலெக்டர் ஆய்வு

தேனி, மே. 16

தேனி மாவட்டம், தேனிஅல்லிநகரம் நகராட்சிப்பகுதியில் (14.05.2026) நீர்வளத்துறையின் சார்பில் மீறுசமுத்திரம் கண்மாயில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய நவீனப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மாவட்டத்தின் தலைநகராக உள்ள தேனி நகரின் பொழுதுபோக்கு அம்சத்திற்காகவும், பொதுமக்கள் நடைபயிற்சி செய்வதற்காகவும்மீறுசமுத்திரம் கண்மாயில் நடைபயிற்சி பாதை மற்றும் பூங்கா அமைக்க வேண்டும் என பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றதைத் தொடர்ந்து, மீறுசமுத்திரம் கண்மாயில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய நவீனப்படுத்தும் திட்டத்திற்கு ரூ.7.40 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மீறுசமுத்திரம் கண்மாயின் கரையை பலப்படுத்துதல், நடைபாதை, பூங்கா, தடுப்புச் சுவர், படகுகள் நிறுத்துமிடம், நுழைவு வாயில், அலுவலகக் கட்டடம், பாதுகாவலர் அறை, நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பறை, சாய்வுதளம், அமரும் மேடை, உணவுக்கூடம் மற்றும் பாலம் அமைத்தல் மேலும், ஆகாய தாமரைஅகற்றுதல், மரங்கள் நடுதல், பறவைகள் தீவு அமைத்தல், கண்காணிப்புபுகைப்படக்கருவி அமைத்தல், பூங்கா மின் வசதிகள் அமைத்தல், படகுகள் மற்றும் பூங்கா விளையாட்டு கருவிகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம், மேற்குறிப்பிட்ட பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இவ்வாய்வில், செயற்பொறியாளர் (மஞ்சளாறு வடிநிலக்கோட்டம்) சரவணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ. எடிசன், உதவி செயற்பொறியாளர் சாலமோன் கிறிஸ்துதாஸ், உதவிப் பொறியாளர் அரவிந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நாகர்கோவில் நகைக்கடை கொள்ளையில் 2 பேர் கைது: மேலும் 3 பேரை பிடிக்க போலீஸ் தீவிரம்

நாகர்கோவில், மே. 16

நாகர்கோவில் அருகே உள்ள என் ஜி ஓ காலனி, மணிக்கெட்டி பொட்டல் சுடலை ஆண்டவர் கோவில் சன்னதி தெருவை சேர்ந்தவர் அன்பையா. இவர் என்ஜிஓ காலனி காமராஜர் சாலையில் நகைக்கடை நடத்தி வருகிறார். நேற்று முன்தினம் இரவு அன்பையா வழக்கம் போல் இரவு 9 மணிக்கு கடையை பூட்டி விட்டு வீட்டுக்கு சென்று விட்டார். இதை அடுத்து நள்ளிரவு நேரத்தில் அங்கு வந்த கும்பல் அன்பையாவின் நகைக் கடை பூட்டை உடைத்து உள்ளே புகுந்தனர். பின்பு அந்த கும்பல் சேர்ந்தவர்கள் நகைக்கடையில் இருந்த 30 பவுன் தங்க நகைகள், 5 கிலோ வெள்ளி பொருட்கள் மற்றும் 1கிலோ ஐம்பொன் போன்ற பொருள்களை திருடி சென்றனர்.

இது குறித்து அன்பையா அளித்த புகாரின் பேரில் சுசீந்திரம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். கொள்ளையர்களை பிடிக்க 2 தனிப் படைகள் அமைக்கப்பட்டன. தனிப் படை போலீசார் தீவிர தேடுதலில் ஈடுபட்டனர். அவர்கள் நகைக்கடை மற்றும் அந்த பகுதியில் இருந்த சிசிடிவி கேமராக்களில்பதிவாகி இருந்தவீடியோ காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்தனர். அதில் கொள்ளைகளின் உருவம் தெளிவாக பதிவாகி இருந்தது. அந்த அடையாளங்களை வைத்து நடத்திய விசாரணையில் கொள்ளை ஈடுபட்டவர்கள் அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் நாகர்கோவில் வடிவீஸ்வரம் பகுதியை சேர்ந்த மாயா கிருஷ்ணன் (38) மற்றும் காரைக்கால் மடம் பகுதியை சேர்ந்த கணேசன் (36)ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரிடம் தனிப்படை போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். இந்தகொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட மேலும் 3 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தலைமறைவாக உள்ள அவர்களையும் தனிப்படை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

### குமரியில்

# மதுவிலக்கு போலீஸ் கைப்பற்றிய 23 வாகனங்கள் ஏலம்; 19ம் தேதி நடக்கிறது

நாகர்கோவில்,மே .16

கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

குமரி மாவட்ட மதுவிலக்கு அமலாக்க பிரிவு வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டு அரசு உடைமையாக்கப்பட்ட 19 பைக்குகள் உட்பட மொத்தம் 23 வாகனங்கள் ஏலம் மாவட்ட போலீஸ் எஸ் பி ஸ்டாலின் முன்னிலையில் வருகிற 19. 5 .2026 காலை 11 மணிக்கு நாகர்கோவில் ஆயுதப் படை மைதானத்தில் வைத்து நடைபெற உள்ளது.

ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் குமரி மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் 19 .5 . 2026 காலை 8 மணிக்கு ரூ.5 ஆயிரம் முன்பணம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம். முன்பணம் செலுத்தாதவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள முடியாது. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் நுழைவு கட்டணமாக ரூ 10 செலுத்த வேண்டும். ஏலம் நடத்துவதற்கு முன்பே வாகனங்களை நன்றாக பார்த்து பரிசோதித்து வாங்கிக் கொள்ளலாம்.

வாகனங்கள் இருக்கும் நிலையில் தான் ஏலம் விடப்படும். ரூ 5 ஆயிரம் செலுத்தியவர் ஒரு வாகனத்தை ஏலம் எடுத்திருந்தால், அடுத்த வாகன ஏலத்தின் கலந்து கொள்ள மறுபடியும் ரூ.5 ஆயிரம் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். ஏலத்தில் எடுத்த வாகன மதிப்பில் முழு தொகையில் கால் பங்கு ஏலம் எடுத்தவுடன் செலுத்த வேண்டும். மீதி முக்கால் பங்கு தொகை ஏலம் உறுதி செய்த கடிதம் கிடைத்தவுடன் விற்பனை வரி 18 சதவீதத்துடன் இரு நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.

முழுத் தொகையையும் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்ட தவறும் பட்சத்தில் அவர் எடுத்த ஏலம் ரத்து செய்யப்பட்டு, அவர் கட்டிய கால்பங்கு பணம் அரசுக்கு வங்கி மூலம் செலுத்தப்படும். ஏலத்தில் கலந்து கொண்டவர்கள்

எந்த வாகனத்தையும் எடுக்கவில்லை என்றால் முன் பணம் ரூ. 5 ஆயிரம் அந்த எந்த கமிஷன் இல்லாமல் ஏலம் நடக்கும் அன்றே திரும்ப வழங்கப்படும். ஏலம் விடப்பட்ட வாகனத்தில் எந்த குறை இருந்தாலும் ஏலம் எடுத்தவரின் பொறுப்பு ஆகும். ஏலம் எடுத்த வாகனம் திரும்ப பெறப்படாது. ஏலம் விடப்பட்ட வாகனத்தை ஏலம் எடுத்தவர் ரசீதையும், உத்தரவு நகலையும் டிஎஸ்பி (ஆயுதப் படை) யிடம் காண்பித்து உடனடியாக வாகனத்தை எடுத்துச் செல்ல வேண்டும்.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# தடை செய்யப்பட்ட மருந்தால் சுவாச பிரச்சனை: பொதுமக்கள் வேதனை



களியல், மே. 16

களியல் அருகே தனியாருக்கு சொந்தமான ரப்பர் தோட்டம் உள்ளது. இங்கு தமிழக அரசால் தடை செய்யப்பட்டசல்பர்எனும்மருந்துரப்பர்மரங்களுக்கு அடிக்கப்பட்டதால்அப்பகுதியில்சேர்ந்தமக்களுக்கு திடீரென சுவாச பிரச்சனை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எனவே இப்பகுதியை சேர்ந்தவர்கள் மருந்து தெளிக்க பயன்படுத்திய வாகனத்தை தடுக்க முயற்சி செய்துள்ளனர். ஆனால் அந்த வாகனம் நிற்காமல் சென்றதாக தெரிகிறது. ஆகையால் இதுபோன்று அரசால் தடை செய்யப்பட்ட மருந்து தெளிக்கும் தனியார் நிறுவனங்கள் மீது மாவட்ட நிர்வாகமும் தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### சாக்லேட் கொடுத்து

# ஆறு வயது சிறுமி பாலியல் வன்கொடுமை : வேன் டிரைவர் கைது

கோவை மே:16

கோவை பீளமேடு பகுதியில் வசித்து வரும் 6 வயது சிறுமிக்கு,அவர் பயிலும் பள்ளியில் ஆர் ஜி டிராவல்ஸ் என்ற தனியார் வேன் ஓட்டுநர்,சோமனூர் பகுதியை சேர்ந்த கணேஷ் என்பவர் பாலியல் வன்கொடுமை இழைத்த கொடூரச் சம்பவம் தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.



கணவரை இழந்த நிலையில்,பிழைப்பிற்காகப் பெங்களூருவில் ஹோம் நர்சிங் வேலை பார்த்து வரும் சிறுமியின் தாய்,தனது மகளைக் கோவையில் உள்ள தனது பெற்றோரிடம் விட்டுச் சென்று உள்ளார்.

இந்நிலையில்கோடை விடுமுறைக்காகச் சிறுமியைத் தன்னுடன் பெங்களூருவிற்கு அழைத்துச் சென்ற போது தான்,அந்தச் பிஞ்சு உள்ளத்தைச் சிதைத்த பகீர் உண்மைகள் ஒவ்வொன்றாகத் தெரியவந்து உள்ளது.

சிறுமிக்குச் சிறுநீர் கழிக்கும் போது வலிப்பதாகக் கூறியதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த தாய்,மகளைப் பரிசோதித்த போது அந்தப் பகுதியில் காயம் இருப்பதைக் கண்டு துடிதுடித்துப் போனார்.இது குறித்துச் சிறுமியிடம் மெதுவாக விசாரித்த போது,அவர் முதலாம் வகுப்பு படிக்கும் காலத்தில் இருந்தே பள்ளி முடிந்ததும் மாலையில் வேன் ஓட்டுநர் கணேசன் என்பவர்,பள்ளி மைதானத்தில் வைத்துத் தனக்குத் தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்து வந்ததாகக் கண்ணீருடன் தெரிவித்து உள்ளார். "யாரிடமாவது சொன்னால் உன்னைக் கொன்று விடுவேன்"என அந்தச் சிறுமியை மிரட்டியதோடு, சாக்லேட் கொடுத்து வாயடைக்க முயன்ற அந்த காமக் கொடூரனின் செயல் ஒட்டுமொத்தப் பெற்றோரையும் திடுக்கிட வைத்து உள்ளது.

பெங்களூரு மருத்துவமனையில் சிகிச்சை அளித்த மருத்துவர்கள்,இது குறித்துக் காவல் நிலையத்தில் புகார் அளிக்குமாறு அறிவுறுத்தியதைத் தொடர்ந்து,சிறுமியின்தாய் கோவை புலியகுளம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.புகாரைப் பெற்றுக் கொண்ட போலீசார்,உடனடியாக பள்ளி வேன் ஓட்டுநர் கணேசனைக் கைது செய்தனர்.

அவர்மீது போக்ஸோ(POCSO) சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்து,தற்போது விசாரணை நடத்தி வருகின்றனர்.பள்ளி வாகனங்களிலேயே குழந்தைகளுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவது கோவையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

### தக்கலை அருகே

# செல்போன் கடையில் பூட்டை உடைத்து; ரூ.46 ஆயிரம் திருட்டு

நாகர்கோவில், மே. 16

தக்கலை அருகே உள்ள கேரளபுரம், கீழப்பரைக்கோடுபகுதியைசேர்ந்தவர்மணிகண்டன் (37). இவர் மேட்டுக்கடை சந்திப்பில் செல்போன் கடை நடத்தி வருகிறார். கடந்த 13ஆம் தேதி இரவு 9 மணி அளவில் வழக்கம் போல் கடையை பூட்டிவிட்டு வீட்டிற்கு சென்றுள்ளார். மறுநாள் காலை (நேற்று முன்தினம்) கடைக்கு வந்தபோது கடையின் பூட்டு உடைக்கப்பட்டு கிடந்தது. உள்ளே சென்று பார்த்தபோது பொருட்கள் சிதறி கிடந்தன. மேலும் கடையில் இருந்த 46 ஆயிரம் பணம், 5 ஆண்ட்ராய்டு மொபைல் போன்கள், 10 சாதாரண செல்போன்கள் கொள்ளையடிக்கப் பட்டிருந்தன.

இவற்றின் மொத்த மதிப்பு ரூ. 2 லட்சம் ஆகும். இது குறித்து மணிகண்டன் தக்கலை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் சம்பவ இடத்தில் சென்று விசாரணை நடத்தினர். இது தொடர்பாக வழக்கு பதிவு செய்த போலீசார் அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மழை நீர் வடிகால்களை தூர் வாருங்கள் அதிகாரிகளுக்கு (பொ)மேயர் உத்தரவு



நாகர்கோவில் மே 16

நாகர்கோவில் மாநகராட்சி 43 வது வார்டுக்கு உட்பட்ட மறவன் குடியிருப்பு பகுதியில் உள்ள சிவன் காலனி, விவேகானந்தா தெரு, ஸுரி கார்டன் நகர் போன்ற பகுதிகளில் கான்கிரீட் தளம் அமைத்து தர வேண்டும் என 43வது வார்டு மாமன்ற உறுப்பினர்மேயரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதையடுத்து பொறுப்பு மேயர் மேரி பிரின்சி லதா கான்கிரீட் தளம் அமைத்துதரகேட்ட பகுதிகளை நேற்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அப்பகுதியில் விரைவில் காங்கிரீட் தளம் அமைத்து தர நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து மேல மறவன் குடியிருப்பு பகுதியில் அங்கன்வாடி மையம் அமைய உள்ள இடத்தை ஆய்வு செய்தார். மேலும் அல்போன்சா தெரு பகுதிகளில் ஆய்வு செய்த மேயர் மழைநீர் வடிகால், கழிவுநீர் ஓடைகளை சீரமைக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது மாமன்ற உறுப்பினர் விஜயன் உதவி பொறியாளர் பிருந்தா, நிஷ்மா, சுகாதார ஆய்வாளர் தேன்மொழி ,சுகாதார அலுவலர் ராஜா மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் நிஷ்மா, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுரணி அமைப்பாளர் அந்தோனி மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

### மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில்

# விமர்சையாக நடைபெற்ற சித்திரை மாத தேய்பிறை பிரதோஷம்



விளாத்திகுளம் மே 16

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் அமைந்துள்ள 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் சித்திரை மாத தேய்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு, நந்தி பகவானுக்கு பால்,தயிர்,சந்தனம்,பன்னீர்,இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது, பின்னர் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட நந்தி பகவான் பக்தர்களுக்கு காட்சியளித்தார். பின்னர் வேத மந்திரங்கள் முழங்க சிவபெருமானுக்கும் நந்தி பெருமானுக்கும் பஞ்சமுக தீபாதாரனை நடைபெற்றது, அப்போது அங்கிருந்த திரளான பக்தர்கள் ஓம் நமச்சிவாயா என பக்தி முழக்கமிட்டு சுவாமி தரிசனம் செய்தனர். இதில் விளாத்திகுளம் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.



# ஈரோடு ஆட்சியர் தலைமையில் தனியார் பள்ளி வாகனங்கள் ஆய்வு

ஈரோடு மே 16

ஈரோடு பவளத்தான் பாளையம் ஏஈடி பள்ளி வளாகத்தில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் கந்தசாமி ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு மற்றும் பெருந்துறை, பகுதிகளில் உள்ள தனியார் பள்ளி வாகனங்களுக்கான வருடாந்திர கூட்டாய்வு பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தொடங்கி வைத்து பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். இதில் தனியார் பள்ளிகளில் செயல்படக்கூடிய வாகனங்களில் அரசின் விதிமுறைகளின்படி, வாகனங்களின் இருக்கைகள், வேக கட்டுப்பாட்டு கருவி, அவசர கால வழி கதவு. தீயணைப்பு கருவி, படிகட்டுகள், முதலுதவி பெட்டி, முதலுதவி உபகரணங்கள், வாகனத்தில் முன், பின்பகுதிகளில்சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதா. மேலும், பல்வேறு பாதுகாப்பு வசதிகளுடன் இயக்கப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், வாகனங்களின் ஆவணங்கள் மற்றும் மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த ஆய்வுகளில் வாகனங்களில் புத்தகப்பை வைக்கும் தனி இடம், பள்ளியின் சின்னம் காவல்துறை, வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் பள்ளி நிர்வாகத்தின் தொலைபேசி எண்கள், படிகட்டு உயரம், லாக்புக், ஜன்னல் கம்பிகள், ஓட்டுநர் கேபின், கதவுடன் இடது பக்க வழி உள்ளிட்டவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.100 பள்ளிகளைச் சேர்ந்த 1,096 வாகனங்களுக்கு வருடாந்திர கூட்டாய்வு நடைபெற்றது. போக்குவரத்து விதிமுறை குறையுள்ள பள்ளி வாகனங்கள் ஒரு வாரத்திற்குள் குறைகளை நிவர்த்தி செய்து மீண்டும் ஆய்விற்கு கொண்டு வர அறிவுறுத்தப்பட்டது.இந்த ஆய்வின்போது ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மான்விழி, வட்டார போக்குவரத்து அலுவலர்கள் நடராஜன் (ஈரோடு), பூங்குழலி (பெருந்துறை). மோட்டார் வாகன ஆய்வாளர்கள் தனசேகர், முத்துசாமி, நித்யா ஆகியோர் உடனிருந்தனர்.




# கோவை மாவட்ட டாஸ்மாக் தொழிற்சங்க கூட்டுக்குழு சார்பில் ஆர்ப்பாட்டம்

கோவை மே:16

கோவை ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கோவை மாவட்டத்தில் மட்டும் 69 கடைகள் (வடக்கு 48 / தெற்கு 21) மூடப்பட்டதால் 300 ற்க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு பணியிழப்பு ஏற்பட்டுள்ளது. மீதமுள்ள இயங்கும் கடைகளுக்கு கூடுதல் பணிப்பளு உயர்ந்துள்ளது.

கீழ்கண்ட கோரிக்கைகளை கோவை மாவட்ட டாஸ்மாக் தொழிற்சங்க கூட்டுக்குழு சார்பில் தமிழக அரசுக்கும், டாஸ்மாக் நிர்வாகத்திற்கும் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம். டகடை ஊழியர்களுக்கு தொடர்ந்து 22 ஆண்டுகள் பணியாற்றிய மூடப்பட்ட பணியாளர்களுக்கு தமிழக அரசின் இதர அரசுத்துறைகளில் உள்ள காலி பணியிடங்களில் நிரந்தரமாக பணியமர்த்திட வேண்டுகிறோம். 500 மீட்டர் என்ற விதிமுறைக்குட்பட்ட டாஸ்மாக் கடைகளை மூடியது போல எஃப் எல் 2 தனியார் மனமகிழ் மற்றங்களையும் இழுத்து மூடிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம். இயங்கிவரும் கடை களுக்கு கூடுதல் ஊழியர்களை நியமிக்கபட வேண்டும். உடைகின்ற பாட்டில்களுக்கு ச காலி பாட்டில்களை திரும்ப பெற ஒப்பந்ததாரே முழு பொறுப்பு ஏற்க வேண்டும். டாஸ்மாக் கடைகள் அனைத்திற்கும் 100% மின் கட்டணத்தை வழங்கிட வேண்டும். கடைகளுக்கு சரக்கு இறக்கித்தர நிர்வாகமே இறக்கு கூலி வழங்கவேண்டும்.



ராமநாதபுரம் மாவட்ட அம்மா மக்கள் முன்னேற்ற கழக நிர்வாகிகளின் எதிர்கால நலன் கருதி கட்சி பதவிகள் கூண்டோடு கலைக்கப்படுவதாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் அறிவித்திருந்தார். இந்நிலையில் அவர் தமிழக வெற்றிக் கழக அமைச்சர் செங்கோட்டையன் முன்னிலையில் த.வெ.க.வில் இணைந்தார். உடன் அ.ம.மு.க. நிர்வாகிகள் இருந்தனர்.



### துர்நாற்றம் வீசும் தற்காலிக கழிப்பிட அறையை மாற்றக்கோரி

# பா.ஜ.கவினர் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டதால் பரபரப்பு

தென்காசி,மே.16

தென்காசி காசிவிஸ்வநாதர் ஆலய ரத வீதியில் பராமரிப்பு இல்லாமல் துர்நாற்றம் வீசும் தற்காலிக கழிப்பிட அறையை மாற்றக்கோரி பா.ஜ.கவினர் நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. தென்காசி நகராட்சி 30 வது வார்டுக்கு உட்பட்ட அருள்மிகு காசிவிஸ்வநாதர் சுவாமி கோவிலின் ரத வீதியான மேலமாசி வீதியின் வேன் ஸ்டாண்ட் அருகில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ஆண் மற்றும் பெண்களுக்கு என இரண்டு தற்காலிக கழிப்பிட அறை நகராட்சி நிர்வாகத்தால் அமைக்கப்பட்டது. ஆனால் அந்த தற்காலிக கழிப்பிட அறைக்கு நகராட்சி நிர்வாகம் முறையாக தண்ணீர் வசதி மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளாததால் மேலமாசி வீதி பகுதிகள் முழுவதும் துர்நாற்றம் வீசி வருவதாக கூறப்படும் நிலையில், தற்காலிக கழிப்பிடத்தை அகற்ற வேண்டும் என்று நகர்மன்றக் கூட்டத்தில் பா.ஜ.க. உறுப்பினர் கொண்டு வந்த தீர்மானமும் நிறைவேற்றப்பட்ட நிலையில் இன்று வரை துர்நாற்றம் வீசும் கழிப்பிட அறை அகற்றப்படவில்லை. இதனால் ஆத்திரம் அடைந்த நகர பா.ஜ.க தலைவரும் நகர்மன்ற உறுப்பினருமான சங்கர சுப்பிரமணியன் தலைமையில் 30வது வார்டு பா.ஜ.க. உறுப்பினர் லட்சுமண பெருமாள் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட பா.ஜ.க.வினர் தற்காலிக கழிப்பிடத்தை உடனடியாக அகற்றக்கோரி நகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டனர். இதனால் அங்கு காவல்துறையினர் குவிக்கப்பட்டனர். நகராட்சி அலுவலக வளாகத்தில் கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பியபடி பா.ஜ.க.வினர் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். நகர்மன்ற அதிகாரிகள் போராட்டம் நடத்தியவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திய நிலையில் வருகிற 20ஆம் தேதி தற்காலிக கழிப்பிட அறையை மாற்றி தரப்படும் என்று உறுதியளித்ததை தொடர்ந்து அனைவரும் கலைந்து சென்றனர். 2 மணி நேரம் நடைபெற்ற முற்றுகை போராட்டத்தினால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

### ஈரோடு பூம்புகாரில்

# கோடைகால கண்காட்சி மற்றும் விற்பனை



ஈரோடு மே 16

கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம் இவைகளை பேணிக்காக்கும் ஒரு அரசு நிறுவனமாக தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக்கழகம் விளங்கி வருகிறது கைவினைக் கலைகளுக்கு உயிர் கொடுத்து காப்பதற்கு பல முயற்சிகளை செம்மையாக பூம்புகார் நிறுவனம் செய்து வருகிறது மேலும் கைவினைஞர்களின் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்தில் பலவகைக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது

இதன் ஒரு கட்டமாக ஈரோடு பூம்புகார் விற்பனை நிலையத்தில் கோடைகால சிறப்பு கண்காட்சி மற்றும் விற்பனை 14.05.2020 முதல் 30.05.2026 முடிய நடைபெறுகிறது.

இக்கண்காட்சியில் தமிழ்நாடு மற்றும் தென்னிந்திய மாநிலங்களின் சுலையழகு மிக்க பித்தளை, பஞ்சலோகம், கற்களால் ஆன சிற்பங்கள், பித்தளை விளக்குகள் மொராதாபாத் கலைப் பொருட்கள், ஜெய்பூர் வண்ண ஓவியங்கள். தஞ்சாவூர் ஓவியம் மற்றும் தட்டுகள். ஆயில் பெயிண்டிங், வலம்புரி சங்கு, அகர்பத்திகள், வாசனை திரவியங்கள் ரோஸ் மரத்தில் பதிக்கப்பட்ட சுவர் அலங்கார பேனல்கள் சகரன்பூர் மரத்தில் செய்யப்பட்ட மசாஜ் பொருட்கள் அலாய் மெட்டல், வெள்ளை உலோகத்தால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்கள், காகிதக்கூழினால் செய்யப்பட்ட பொம்மைகள், மாக்கல் விநாயகர், சந்தனக்கட்டைகள், சென்னப்பட்டனா பொம்மைகள், மற்றும் மண்கலை அலங்காரப் பொருட்கள் நவரத்தினக் கற்கள், விலை உயர்ந்த ராசி கற்கள், ஒளி வீசும் இதர கற்கள் பதித்த ஐம்பொன் நகைகள், முத்து நகைகள் ருத்திராட்சமாலை ஸ்படிக மாலை, மற்றும் எண்ணற்ற பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன

இக்கண்காட்சியில் புதுவரவாக கண்ணாடியில் வரையப்பட்ட ஓவியங்கள் மற்றும் மார்பில் மாவினால் செய்யப்பட்ட அழகிய கைவினைப் பொருட்கள் வித்தியாசமான ராஜஸ்தான் ஒட்டக பொம்மை போன்றவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

குறைந்தபட்சமாக ரூ. 60 முதல் 1 இலட்சம் வரையில் கைவினைபொருட்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளது. குறிப்பிட்டப் பொருட்களுக்கு 10 சிறப்பு சிறப்பு தள்ளுபடி உண்டு. இத்தகவலை ஈரோடு பூம்புகார் நிறுவன மேலாளர் சேவியர் தெரிவித்து உள்ளார்.

### கடத்தூர் ஒன்றியத்தில்

# நிலுவையில் உள்ள வளர்ச்சி திட்ட பணிகளை விரைந்து முடிக்க ஆட்சியர் அறிவுறுத்தல்




தருமபுரி மே 16

தருமபுரி மாவட்டம் கடத்தூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் சதீஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது மணியம்பாடியில் ரூ.5 லட்சத்து 99 ஆயிரம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் 5 வகுப்பறை கட்டிடங்கள் சீரமைக்கப்பட்டு ரயில் வடிவில் இருப்பதை பார்வையிட்டார். கடத்தூர்வட்டாரவளர்ச்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் உள்பட கட்டமைப்பு வசதிகளை ஆய்வு செய்தார். இவற்றை முறையாக பராமரிக்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து குடிநீர் விநியோகம் மற்றும்பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளின் செயல்பாடுகளை குறித்து அலுவலர்கள் பங்கேற்ற ஆய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஆட்சியர் நிலுவையில் உள்ள வளர்ச்சி திட்ட பணிகளை குறிப்பிட்ட கால அளவிற்குள் விரைந்து முடிக்க உத்தரவிட்டார். ஆய்வின்போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுருளிநாதன் கல்பனா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### நாகர்கோவிலில்

# வீடு புகுந்து மூதாட்டியை கத்தியால் குத்தி நகை கொள்ளை

நாகர்கோவில், மே.16

நாகர்கோவில் வடக்கு கோணம் பகுதியை சேர்ந்தவர் துரைசாமி மனைவி வசந்தா (70). இவர் நேற்று முன்தினம் மாலை வீட்டில் தனியாக இருந்துள்ளார். அப்போது 3 பேர் கொண்ட கும்பல் வசந்தாவிடம் குடிப்பதற்கு தண்ணீர் கேட்டுள்ளனர். அவர்களுக்கு தண்ணீர் எடுப்பதற்காக வசந்தா வீட்டுக்குள் சென்றுள்ளார். அப்போது அவரை பின்தொடர்ந்து சென்ற கும்பல் அவர் கழுத்தில் கத்தியை வைத்து அவர் அணிந்திருந்த 3 கிராம் தங்க கம்மலை பறித்து சென்றனர்.

கத்தியால் கழித்ததில் அவர் கழுத்தில் காயம் ஏற்பட்டுள்ளது. நகைகளை திருடி விட்டு கும்பல் பைக்கில் தப்பி உள்ளனர். வசந்தா வீடு தனியாக அமைந்துள்ளது. இதனால் அக்கம் பக்கத்தில் யாரும் இதை கவனிக்கவில்லை. நீண்ட நேரத்திற்கு பின் இந்த சம்பவம் தெரிய வந்தது. உடனடியாக வசந்தாவை மீட்டு குமரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். சம்பவம் குறித்து ஆசாரிப்பள்ளம் போலீசார் விசாரணை தொடங்கி உள்ளனர்.

மூதாட்டியை கத்தியால் குத்தி நகையை பறித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. வசந்தா வீட்டில் தனியாய் இருக்கிறார் என்பதை தெரிந்து கொண்டு கொள்ளை கும்பல் வந்துள்ளது. உள்ளூரை சேர்ந்த கும்பலாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது குறித்து அந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை போலீசார் ஆய்வு செய்து விசாரித்து வருகின்றனர்.



### கன்னியாகுமரி

# பகவதியம்மன் கோவில் வைகாசி விசாக விழா: கால்நாட்டு விழா நடந்தது

கன்னியாகுமரி,மே.16

பிரசித்தி பெற்ற கன்னியாகுமரி பகவதி கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் விசாக பெருந்திருவிழா 10 நாட்கள் நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான வைகாசி விசாகப் பெருந்திருவிழா 21ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. முன்னதாக 20 ஆம் தேதி மாலையில் கோட்டார் இளங்கடை பட்டாரியர் சமுதாய ருத்ரபதி விநாயகர் செவ்விட்ட சாஸ்தா டிரஸ்ட் சார்பில் கொடிப் பட்டம் மேளதாளம் முழங்க விவேகானந்தபுரம் சந்திப்பில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கோவிலில் ஒப்படைக்கப்படுகிறது.

அதைத்தொடர்ந்து இரவு 7 மணிக்கு மத ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டான நிகழ்ச்சியாக நடக்கும் கொடி மரக்கயிறு கன்னியாகுமரி கிறிஸ்தவர்களால் மேளதாளம் முழுங்க ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கோவிலில் ஒப்படைக்கப்படுகிறது. 21 ஆம் தேதி காலை 8 மணிக்கு மேல் 9 மணிக்குள் திருக்கொடியேற்றம் நடக்கிறது. இந்த திருவிழா 30 ஆம் தேதி வரை 10 நாட்கள் தொடர்ந்து நடக்கிறது.

9 ஆம் திருவிழாவான 29ஆம் தேதி காலையில் தேரோட்டம்நடக்கிறது. அன்றுகாலை 9.30 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் திருத்தேர் வடம் தொட்டு தேரோட்டம் தொடங்கி வைக்கப்படுகிறது. 10 ஆம் திருவிழாவான 30 ஆம் தேதி காலை 6.15 மணிக்கு மேல் 7 மணிக்குள் முக்கடல் சங்கமத்தில் பகவதி அம்மனுக்கு ஆராட்டு நிகழ்ச்சி நடக்கிறது.

பின்னர் வருடத்தில் 5 முக்கிய விசேஷ நாட்களில் மட்டும் திறக்கப்படும் கோவிலின் கிழக்கு வாசல் திறக்கப்பட்டு அதன் வழியாக அம்மன் கோவிலுக்குள் பிரவேசிக்கும் நிகழ்ச்சி நடக்கிறது. இரவு 9 மணிக்கு தெப்பத் திருவிழா நடக்கிறது. தெப்பத்திருவிழா நிறைவடைந்த பின்னர் நள்ளிரவில் அம்மனுக்கு முக்கடல் சங்கமத்தில் ஆராட்டு நிகழ்ச்சி நடக்கிறது. இந்த விழாவுக்கான கால் நாட்டு நிகழ்ச்சி நேற்று காலை கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கன்னியாகுமரி தெற்கு ரதவீதியில் உள்ள கன்னியம்பலம் மண்டபத்திலும் கால் நாட்டு நிகழ்ச்சி நடந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

### ஈத்தாமொழி அருகே

# தூக்கில் தொங்கிய மீனவர் அழுகிய நிலையில் உடல் மீட்பு

நாகர்கோவில், மே. 16

நாகர்கோவில் அடுத்த ஈர்தாமொழி, பொழிக்கறையை சேர்ந்தவர் ஆன்றோ(51). மீனவர். இவருக்கு சகாய ரூபெல்லா (45) என்ற மனைவி, பிள்ளைகள் உள்ளனர்.

ஆன்டோவுக்கு மது குடிக்கும் பழக்கம் உள்ளதால் அவர் அடிக்கடி வீட்டில் மனைவி மற்றும் பிள்ளைகளிடம் தகராறு செய்து வந்ததாக கூறப்படுகிறது. சம்பவ தினம் கணவன் மனைவி இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆன்றோ தனது பைக்கை எடுத்து கொண்டு வெளியில் சென்று விட்டார். இதனால் சகாய ரூபெல்லா தனது பெற்றோர் வீட்டிற்கு சென்று சென்றுள்ளார்.

இதை அடுத்து நேற்று வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக பக்கத்து வீட்டுக்காரர்கள் சகாய ரூபெல்லாவுக்கு தகவல் கூறினார். இதையடுத்து வீட்டிற்கு சென்ற அவர் உட்புறமாக பூட்டப்பட்டிருந்த கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று பார்த்தபோது, அங்கு மின்விசிறியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆன்றோ காணப்பட்டார். அவரது உடல் அழுகிய நிலையில் காணப்பட்டது.

இது குறித்து ஈத்தாமொழி போலீசருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திலே சென்று உடலை கைப்பற்றி குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



## பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினருக்கு

# அரசு போக்குவரத்து கழக தொழிற்சங்கத்தினர் உற்சாக வரவேற்பு

தேனி மே.16

தேனிமாவட்டம் பெரியகுளம் அரசு போக்குவரத்து கழக பணிமனையில் மத்திய சங்கம் கார்த்திக் தலைமையில் அரசு போக்குவரத்துக் கழக தொழிற் சங்கத்தினர் பெரியகுளம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் சபரி ஐங்கரனுக்கு ஏலக்காய் மாலை அணிவித்து மரியாதை செய்தும், மகுடம் சூட்டியும், பொன்னாடை போர்த்தியும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து கிளை மேலாளர் சரவணக் குமார் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்தனர். அப்போது பணிமனையில் தொழிற்கூடம் வளாகப் பகுதியில் சிமெண்ட் தளம் மேற்கொள்ளவும், சுகாதார வளாகத்தை சீரமைத்திடவும், போக்குவரத்துக் கழக பணியாளர்கள் மற்றும் ஊழியர்களின் பணிபாதுகாப்பிற்கு வழிவகை மேற்கொள்ளவும் கோரிக்கை வைக்கப் பட்டது.

இந்நிகழ்வின் போது கிளை நிர்வாகி ராஜ்கமல், போடி கிளை அலுவலக உதவியாளர் முத்துச்செல்வம் மற்றும் போக்குவரத்துக் கழக பணிமனை பணியாளர்கள் மற்றும் தொழிற்சங்கத்தினர் உடனிருந்தனர்.




## 2024 – 2025 ஆண்டில் மழையால் நெற்பயிர்கள் பாதிப்பு

# விவசாயிகளுக்கு ரூபாய் 31.81 கோடி நஷ்ட ஈடு: தஞ்சாவூர் கலெக்டர் தகவல்

தஞ்சாவூர் மே 16

2024 - 2025 ஆண்டில் மழையால் நெற்பயிர்கள் பாதிப்பு அடைந்ததை அடுத்து விவசாயிகளுக்கு ரூபாய் 31.81 கோடி நஷ்ட ஈடு வழங்கப்பட்டு ள்ளது என்று மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் கூறினார்.

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயி கள் குறைதீர்க்கும் கூட்டம் நடை பெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தலைமை, தாங்கி பேசிய தாவது

தஞ்சாவூர் மாவட்டத்தில் 2026-27 ஆண்டு 52,956 ஏக்கர் பரப்பில் குறு வை சாகுபடி மேற் கொள்ளப்பட்டு ள்ளது. குறுவை சாகுபடிக்கு தேவை யான யூரியா, டிஏபி, காம்ப்ளக்ஸ் உரங்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உரக்கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகி க்கப்பட்டு வருகிறது

தஞ்சை மாவட்டத்தில் ஒரு லட்சத்து 40ஆயிரத்து 708 விவசாயி கள் உள்ளனர் .இன்னும் விவசாய அடையாள எண் பெறாத விவசாயி கள், தங்களுடைய நிலத்தின் கணினி சிட்டா, ஆதர் அட்டை, ஆதார் எண்ணுடன் இணைக்கப் பட்ட கைப்பேசி எண் ஆகியவற்றுடன்அருகில்உள்ளபொது இசேவை மையம் அல்லது அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகங்களில் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் .

தஞ்சாவூர் மாவட்டத்தில் 2024 25 ஆண்டு மே மாதம் பெய்த கோடை மழையால் பாதிக்கப் பட்ட 455 ஏக்கர் பரப்பிற்கு ரூபாய் 28 லட்சம் நிவார ணத் தொகையும், செப்டம்பர் மாதம் பெய்த தென் மேற்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட 2,996 ஏக்கர் பரப்பிற்கு ரூபாய் 157 லட்சம் நிவாரண தொகையும், அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை பெய்த மழையால் பாதிக் கப்பட்ட 2,325 ஏக்கர் பரப்பிற்கு ரூபாய் 160 லட்சம் நிவாரணத் தொகையும் அரசால் விடுவிக்கப்பட்டு, விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது .

மேலும் 202425 ஆம் ஆண்டு வடக்கிழக்கு பருவமழை மற்றும் பருவம் தவறிய மழையால் பாதிக் கப்பட்ட 29, 620 ஏக்கர் பரப்பிற்கு ரூபாய் 20 கோடியே 40 லட்சம் நிவாரணத்திற்கு அரசாணை பெறப்பட்டு விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப் பட்டுள் ளது. தற்போது அக்டோபர் மாதம் மற்றும் டிசம்பர் மாதம் பெய்த வடகிழக்கு பருமழையால் 33 சதவீத த்துக்கு மேல் பாதிப்புக்குள்ளான பரப்புகள் கணக்கீடு செய்யப்பட்டு 9,833 ஏக்கர் பரப்பிற்கு ரூபாய் 7 கோடியே 96 லட்சம் நிவாரணத்தி ற்கு அரசு அணை பெறப்பட்டு விவசாயிகளில் வங்கி கணக்கில் வரவு வைக்கப் பட்டுள்ளது

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபாண்டு 655 நேரடி நெல் கொள்முதல் நிலைகள் திறக்கப் பட்டு 6,21,796 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதுவரை ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 893 விவசாயி களுக்கு ரூபாய் 1,571 கோடி மின்னணு வங்கி பண பரிவர்த்தனை மூலமாக வழங்கப்பட்டுள்ளது இவ்வாறு அவர் கூறினார்

இதில் வன அலுவலர் கார்த்திகேயினி ,மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், வேளாண் மை இணை இயக்குனர் வித்யா மற்றும் அதிகாரிகள் விவசாயிகள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின்சார்பில்காலநிலைமாற்றத்தினால்ஏற்படும்எல்நினோவிளைவுகளை எதிர்கொள்வது குறித்து வல்லுநர்கள்,தன்னார்வலர்கள்மற்றும்அரசு அலுவலர்களுக்கான பயிற்சி பட்டறை மாவட்ட ஆட்சியர் சதீஷ் தலைமையில் நடைபெற்றது . மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் ரூபன் சங்கர் ராஜ் , மகளிர் திட்ட இயக்குனர் சுந்தர்ராஜன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன், சிறுதுளி இயக்க தலைவர் மயில்சாமி, ஊரக வளர்ச்சி முகாமை செயற்பொறியாளர் பாலகிருஷ்ணன், பென்னாகரம் உட்கோட்டம் உதவி செயற்பொறியாளர் மகேஷ் குமார் , தருமபுரி உட்கோட்டம் உதவி செயற்பொறியாளர் சாயி ஜனார்த்தனன் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள், வல்லுநர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

## நாகர்கோவிலில்

# வீட்டில் சடலமாக நீதிமன்ற ஊழியர் மீட்பு

நாகர்கோவில், மே. 16

நாகர்கோவில் நாகராஜா கோவில் தெருவை சேர்ந்தவர் முருகன் (60). குழித்துறை நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வந்தார். இவருக்கு மது குடிக்கும் பழக்கம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. அடிக்கடி குடும்பத்தினரிடம் தகராறு செய்வது வழக்கமாம். சமீபத்தில் வீட்டில் தகராறு செய்துவிட்டு நாகர்கோவில் புன்னைநகர் பகுதியில் ஹவுசிங் போர்டு காலனியில் இருக்கும் அவரது வீட்டில்தனியாகவசித்துவந்தார்.கடந்தஇருநாட்களாக இவர் செல்போனை எடுத்துப் பேசவில்லை. இதனால் சந்தேகம்அடைந்தஅவரதுமகன்சென்றுபார்த்தபோது, முருகன் வீட்டில் உயிரிழந்த நிலையில் கிடந்தார்.

இது குறித்து ஆசாரிப்பள்ளம் காவல் நிலையத்திற்கு தகவல்தெரிவித்தனர்.போலீசார்சென்றுமுருகனுடைய உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அதிக குடிபோதையில் முருகன் இறந்ததாக கூறப்படுகிறது. இது குறித்து அவரது மனைவி கல்யாணி அளித்த புகாரின் பேரில் ஆசாரிப்பள்ளம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். பிரேத பரிசோதனை அறிக்கைக்கு பின்னரே முருகன் எப்படி இறந்தார் என்பது தெரிய வரும் என போலீசார் கூறினர்.

## பளுகல் அருகே

# ஆசிரியர் மயங்கி விழுந்து சாவு

மார்த்தாண்டம், மே. 16

பளுகல் அருகே உள்ள இடைக்கோடு பகுதியை சேர்ந்தவர் சத்திய தாஸ் (53). இவர் மேல்பாலை பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் ஓவிய ஆசிரியராக பணியாற்றிவந்தார்.சம்பவதினம்வீட்டில்இருந்தபோது திடீரென சத்திய தாஸ் மயங்கி விழுந்துள்ளார். இதில் அவரதுபின்தலையில்அடிபட்டுபடுகாயம்ஏற்பட்டது. அவரைஉடனடியாக ஆட்டோமூலம் மேல்பாலையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக காரக்கோணம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள் சத்யதாஸ் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினார்கள். இதையடுத்தது அவரது உடலை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இது குறித்து பளுகல் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## சாலை விபத்தில் சிக்கிய

# குலசேகரம் பகுதி சட்ட கல்லூரி மாணவர் பலி



மார்த்தாண்டம், மே.16

குலசேகரம் அருகே செருப்பாலூர் பகுதியை சேர்ந்தவர் முருகன். இவர் குலசேகரம் பேருராட்சி முன்னாள் துணைத் தலைவராக இருந்து வந்தார். இவருக்கு 2 மகன்கள் உள்ளனர். ஒருவருக்கு திருமணம் ஆகி விட்டது. இளைய மகன் சுஜித்குமார் ( 30). இவர் ஆந்திர மாநிலம் விசாகபட்டிணத்தில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் எல்எல்பி சட்டப் படிப்பு படித்து வந்தார். தற்போது இறுதி ஆண்டு தேர்வு எழுதிவிட்டு தனியார் பேருந்தில் ஊருக்கு வரும் போது, கடந்த 9ம் தேதி விழுப்புரம் மாவட்டம் தொண்டி ஆற்றுப் பாலத்தில் பஸ் வரும் போது முன்னாள் சென்ற கார் திடீரென பிரேக் பிடித்ததால் சொகுசு பேருந்தை டிரைவர் வலது பக்கம் திருப்பியுள்ளார். இதில் பேருந்து, டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து தலைகீழாக கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த பேருந்தில் 34 பயணிகள் இருந்தனர். ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழ்ந்தார் .படுகாயம் அடைந்தவர்கள் பல்வேறு ஆஸ்பத்திரிகளில் சிகிட்சை பெற்று வந்தனர். இதில் பயணம் செய்த சுஜித்குமார் படுகாயம் அடைந்து பாண்டிசேரி ஜிம்மர் ஆஸ்பத்திரியில் கடந்த ஒரு வாரமாக சிகிட்சை பெற்று வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு சிகிட்சை பலன் அளிக்காமல் உயிரிழந்தார். நேற்று அவரது உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. சட்ட கல்லூரி மாணவர் சாலை விபத்தில் இறந்தது அந்த பகுதி மக்களிடத்தில் சோகத்தை ஏற்படுத்தியது.


# தருமபுரி அதிமுக புதிய மாவட்ட செயலாளர்களுக்கு உற்சாக வரவேற்பு



தருமபுரி மே 16

தருமபுரி மாவட்டத்திற்கு புதிதாக இரண்டு மாவட்ட செயலாளர்களை அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். புதிய மாவட்ட செயலாளர்கள் டி.ஆர்.அன்பழகன் மற்றும் டாக்டர் ஆர்.அசோக்குமார் இருவரும் தருமபுரி நகரில் உள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் அம்பேத்கர் சிலைகளுக்கு மாலை அணிவித்து, கட்சி அலுவலகத்திற்கு ஊர்வலமாக சென்றனர். மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட கட்சி அலுவலகத்தில் உள்ள எம்.ஜி.ஆர். ஜெயலலிதாதிரு உருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்த நிகழ்ச்சியில் அனைத்திந்தியஅண்ணாதிராவிடமுன்னேற்றகழகத்தைச் சார்ந்த 500 ம் மேற்பட்ட தொண்டர்கள் ஊர்வலமாக வரவேற்பு அளித்தனர் . இதில் அதிமுக கழக அமைப்புச் செயலாளர் சிங்காரம் , அரூர் சட்டமன்ற உறுப்பினர் சம்பத்குமார், தருமபுரி நகர செயலாளர் பூக்கடை ரவி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஆஸ்டின் எம்.எல்.ஏ. விடம் வாழ்த்து



நாகர்கோவில் மாநகராட்சி (பொ) மேயர் மேரி பிரின்ஸி லதா நேற்று நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி எம்.எல்.ஏ ஆஸ்டினை நாகர்கோவில் அரசு விருந்தினர் மாளிகையில் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் திமுக மாநகர செயலாளர் வழக்கறிஞர் ஆனந்த் உடனிருந்தார்.



## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# பிளஸ் 2 தேர்வில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற பள்ளி தலைமை ஆசிரியரு க்கு பாராட்டு சான்றிதழ்: மாவட்ட கலெக்டர் வழங்கினார்

தஞ்சாவூர் மே 16

தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழை கலெக்டர் பிரியங்கா பங்கஜம் வழங்கினார்

மாவட்ட அளவில் 81 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளன மேலும் அரசு பள்ளிகள் பிரிவில் கடந்த ஆண்டு 12 வதுஇடத்திலிருந் து ,தஞ்சாவூர் மாவட்டம் . இந்த ஆண்டு மாநில அளவில்7வதுஇடத்திற்கு முன்னேறி உள்ளது. அரசு பள்ளிகளில் மட்டும் 23 பள்ளி கள் 100 சதவீத தேர்ச்சி பெற்றுள் ளன.

இந்த ஆண்டு 105 அரசு பள்ளிகள், 40 அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் 84 தனியார் பள்ளிகள் என மொத்தம்229பள்ளிகளை சேர்ந்த 25 ,944 மாணவ மாணவியர்கள் தேர்வு எழுதினர். இதில் 25, 215 பேர் தேர்ச்சி பெற்ற னர். மாணவர்கள் 96.04 சதவீதமும் மாணவிகள் 98.20 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர் .அதேபோல் அரசு பள்ளிகளில் மட்டும் 10,176 மாணவ மாணவிகள் தேர்வு எழுதியதில் 9,746பேர் தேர்ச்சி பெற்றனர். அரசு பள்ளிகளில் மொத்த தேர்ச்சி விதம் 95.77 சதவீதமாகும்

இதையடுத்து 100 சதவீத தேர்ச்சி பெற்ற 34 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி தலைமை ஆசிரியர்களையும், கடந்த ஆண்டு விட அதிக தேர்ச்சி விகிதம் பெற்ற 68 பள்ளி தலைமை ஆசிரியர்களையும் பாராட்டி கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவதனம், மாவட்ட வருவாய் அலுவலக தியாகராஜன், முதன்மை கல்வி அலுவலர் பேபி மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஜூன் முதல் செப்டம்பர் 2026 வரை தென்மேற்கு பருவ காற்றினால் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதால், மழை வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளை தடுக்க ஏதுவாக முன்னேற்பாடுகள் மற்றும் தயார்நிலை பணிகள் குறித்து வருவாய் துறை, காவல் துறை, தீயணைப்புத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, மருத்துவத்துறை, கால்நடைபராமரிப்புத்துறை உள்ளிட்ட துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .அ.சாதனைக்குறள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா, ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் .முகம்மது ஷபீர் ஆலம் ., ஓசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான், பேரிடர் மேலாண்மைத்துறை வட்டாட்சியர் .வெங்கடேசன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



கோவை சூலூர் பகுதியைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் விபி கந்தவேல் தனது ஆதரவாளர்களுடன் அதிமுகவிலிருந்து விலகி முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தார்.மக்கள் மைய அரசியலால் ஈர்க்கப்பட்டு இந்த முடிவு எடுத்ததாக தெரிவித்துள்ளார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.